தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

கனி பிரின்டிங்
DTP
நாளிதழ் வார இதழ் மாத இதழ்
சிறந்த முறையில் (DTP) செய்து தரப்படும்
நாளிதழ் மந்திலி மேகஸிங் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்
தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 இதழ்:282 4 பக்கங்கள் 09:05:2026 சனிக்கிழமை விலை ரூ.6 வருடசந்தா ரூ,1825



உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

**விளக்கம்:**

அடுத்தவர் பொருளை அவருக்குத் தெரியாமல் திருடுவோம் என்று மனத்தால் நினைப்பதும் தீமையானது.

## அமைதி, ஸ்திரத்தன்மை, வளர்ச்சிக்கு இந்தியா - வியட்நாம் இணைந்து பாடுபடும்: பிரதமர் மோடி அறிவிப்பு



புதுடெல்லி: மே,09

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை, வளர்ச்சிக்கு இந்தியாவும் வியட்நாமும் ஒருங்கிணைந்து பாடுபடும் என்று பிரதமர் நரேந்திர மோடி நேற்று தெரிவித்தார். இந்தியாவுக்கு 3 நாள் அரசு முறைப் பயணமாக வருகை தந்துள்ள வியட்நாம் அதிபர் டோ லாம் மற்றும் பிரதமர் மோடி இடையிலான உயர்நிலை குழுப் பேச்சுவார்த்தை டெல்லியில் நேற்று நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறை உறவுகளைப் பெருமளவில் விரிவுபடுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதுதொடர்பான கூட்டறிக்கையில் பிரதமர் மோடி கூறியுள்ளதாவது: இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய இரு நாடுகளுமே இந்தோ - பசிபிக் பிராந்தியத்தைப் பொறுத்த வரை ஒரே மாதிரியான தொலைநோக்குப் பார்வையைத் கொண்டுள்ளன. இந்தப் பிராந்தியத்தில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும், அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி ஏற்படவும் இரு நாடுகளும் தொடர்ந்து ஒன்றிணைந்து பங்களிப்பை வழங்கும். இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார். சீனாவின் ஆதிக்கம்இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்து வரும் ராணுவ ஆதிக்கம் மற்றும் அத்துமீறல்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்கள் தலைமையிலான குழுக்கள் விரிவாக விவாதித்ததாகத் தெரிகிறது. சர்வதேச கடல் எல்லை விதிகளுக்கு உட்பட்டு இப்பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.இந்தியா - வியட்நாம் இடையே பொருளாதார ஒத்துழைப்பு, ராணுவத் தளவாட உற்பத்தி மற்றும் தொழில்நுட்பப் பகிர்வு ஆகிய துறைகளில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று கையெழுத்தாகின. இது ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்பாட்டுக் கொள்கைக்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக அமைந்துள்ளது.

## மம்தா ராஜினாமா செய்யாததால் மேற்கு வங்க சட்டப்பேரவை கலைப்பு



கொல்கத்தா: மே,09

முதல்வர் பதவியை மம்தா பானர்ஜி ராஜினாமா செய்ய மறுத்த நிலையில் மேற்கு வங்க சட்டப்பேரவையை ஆளுநர் ஆர்.என்.ரவி கலைத்துள்ளார்.மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் கடந்த 4ம் தேதி வெளியிடப்பட்டன. இதில் பாஜக 207 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. திரிணமூல் காங்கிரஸுக்கு 80 இடங்கள் மட்டுமே கிடைத்தன.இது தொடர்பாக மம்தா பானர்ஜி கடந்த 5ம் தேதி நிருபர்களிடம் கூறும்போது, “மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் தோல்வி அடையவில்லை. எங்கள் வெற்றி களவாடப்பட்டது. முதல்வர் பதவியை நான் ராஜினாமா செய்ய மாட்டேன்” என்று தெரிவித்தார்.இந்த சூழலில் ஆளுநர் ஆர்.என். ரவி நேற்று வெளியிட்ட உத்தரவில், “மேற்குவங்க சட்டப்பேரவை மே 7-ம் தேதியுடன் கலைக்கப்படுகிறது” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## விவேகம் பள்ளியின் தாராபுரம் 100% தேர்ச்சி சாதனைகள்



+2 பொதுத்தேர்வில் விவேகம் பள்ளி மாணவர்கள் K.S. தினேஷ் பாலாஜி மற்றும் S. சஞ்சய் ஆகிய இரு மாணவர்கள் 597/600 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் முதலிடமும் மாநில அளவில் இரண்டாமிடமும் பெற்று சாதனை படைத்துள்ளனர். மேலும் மாணவி D. தேவமித்ரா 596/ 600 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் இரண்டாமிடமும், மாநில அளவில் மூன்றாமிடமும் பெற்றுசாதனைபடைத்துள்ளார். மாணவி M. ரேஷ்மா 593/600 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் மாணவ மாணவிகள் 100/100 மூன்றாமிடமும் பெற்றுள்ளார். பாடவாரியாக 100 மதிப்பெண்கள் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.8 மாணவ மாணவிகள் 590 மதிப்பெண்களுக்கு மேலும், 231 மாணவ மாணவிகள் 500 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மாணவன் V.நிரஞ்சன் நான்கு பாடங்களில் 100/100 மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்துள்ளார். மேலும் 4 மாணவ மாணவிகள் மூன்று பாடங்களிலும் 17 மாணவ மாணவிகள் இரண்டு பாடங்களிலும் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 100 என்பது குறிப்பிடத்தக்கது.மாநில அளவிலும் பள்ளி அளவிலும் சாதனை புரிந்த மாணவ மாணவிகளை பள்ளியின் தாளாளர் Dr. R சுப்ரமணியன், செயலாளர் Dr. K. பூபதி மற்றும் நிர்வாகிகள் திரு.N. நடராஜன், திரு.M.விஜயகுமார், Dr.K.கனகராஜ் ஆகியோர் பரிசளித்துப் பாராட்டிச் சிறப்பித்தனர்.

# தவெக-வை ஆட்சியமைக்க ஆளுநர் அழைக்காதது சட்டப்படி சரியா, தவறா? - சட்ட நிபுணர்கள் விளக்கம்



சென்னை: மே,09

தமிழகத்தில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற தவெக தலைவர் விஜய்யிடம் ஆளுநர் மாளிகையிலேயே பெரும்பான்மையை நிரூபிக்கக் கூறியது அரசியலமைப்பு சட்ட ரீதியாக சரியா, தவறா என சென்னை உயர் நீதிமன்ற சட்ட நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர். ஆட்சியமைக்க தவெகவுக்கு ஆளுநர் அழைப்பு விடுக்காத விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் அபுடுகுமார் ராஜரத்தினம் கூறும்போது, “பொதுவாக தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஒரு கட்சி தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது என்றால் ஆளுநர் நேரடியாகவே அந்த கட்சியை ஆட்சியமைக்கும்படி அழைப்பு விடுப்பார்.தொங்கு சட்டப்பேரவை அமையும் போது கூட்டணி ஆட்சி அல்லது எந்த கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளதோ அந்த கட்சி தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென அரசியலமைப்பு சட்ட பிரிவுகள் 163 மற்றும் 164 பிரகாரம் ஆளுநர் அழைப்பு விடுப்பார்.அப்படி அழைப்பு விடுக்கும்போது முதலில் அக்கட்சியின் சார்பில் தேர்வு செய்யப்படும் தலைவருக்கு தமிழக முதல்வராக ஆளுநர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். பிறகு தற்காலிக சட்டப்பேரவைத் தலைவர் தேர்வு செய்யப்பட்டு சட்டப்பேரவையில் அனைத்து எம்எல்ஏ-க்களும் பதவிப்பிரமாணம் எடுப்பர். அதன்பிறகே அந்தக் கட்சிக்கு பெரும்பான்மை பலம் இருக்கிறதா, இல்லையா என்பதை வாக்கெடுப்பு முறையில் நிரூபிக்க வேண்டும். இதுதான் எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றத்தால் நிலைநாட்டப்பட்ட சட்டப்பூர்வ வழிமுறை.தவெக தற்போது 108 இடங்களில் வெற்றி பெற்று அதிக இடங்களில் வெற்றி பெற்ற கட்சியாக முதலிடத்தில் உள்ளது. இந்தச் சூழலில் ஆட்சியமைக்க உரிமை கோரும்போது விஜய் தனக்கான பெரும்பான்மை பலத்தை சட்டப்பேரவையில் நிரூபித்தால் போதும்.அதை ஆளுநர் மாளிகையில் வைத்து நிரூபித்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை. விஜய் 118 எம்எல்ஏ-க்களின் ஆதரவை சட்டப்பேரவை தளத்தில் நிரூபித்துக்காட்டி விட்டால் அவர் முதல்வராக தொடர சட்ட ரீதியாக எந்த தடையும் இல்லை.ஆனால் ஒருவேளை விஜய் தனது பலத்தை நிரூபிக்க முடியாவிட்டால் அவரது தலைமையிலான ஆட்சி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356 பிரகாரம் கலைக்கப்பட்டு, தவெக-வுக்கு அடுத்தபடியாக யார் பெரும்பான்மையை நிரூபிக்கிறோம் எனக் கூறுகிறார்களோ அவர்களுக்கு ஆளுநர் அழைப்பு விடுக்க வேண்டும். தனக்குரிய விருப்புரிமை அடிப்படையில் விஜய்யை முதலில் அழைக்க முடியாது என ஆளுநர் ஒருபோதும் கூற முடியாது. அப்படிக்கூறினால் அது உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது” என்றார். மத்திய அரசு தரப்பு மூத்த வழக்கறிஞர்கள் கூறும்போது, “தவெக தலைவர் விஜய், அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ள கட்சி என்ற அடிப்படையில் தங்களை ஆட்சியமைக்க அழைக்க வேண்டுமென ஆளுநரிடம் நேரடியாக உரிமை கோரவில்லை.அப்படி கோரியிருந்தால், இந்நேரம் ஆளுநர் தவெகவுக்கு அழைப்பு விடுத்திருப்பார். அவர்களும் சட்டப்பேரவையில் தங்களது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டியிருக்கலாம். ஆனால், எடுத்த எடுப்பிலேயே எங்களிடம் 107 எம்எல்ஏ-க்கள் உள்ளனர்.காங்கிரஸ் கட்சியின் 5 எம்எல்ஏ-க்கள் எங்களுக்கு ஆதரவு அளித்து கடிதம் அளித்துள்ளனர் எனக் கூறி கூட்டணி ஆட்சி அமைக்கிறோம் என ஆளுநரிடம் கூறியதுதான் சிக்கல். காங்கிரஸ் கட்சியின் 5 எம்எல்ஏ-க்களையும் சேர்த்தால்கூட ஆட்சியமைக்க தேவையான 118 இடங்கள் வரவில்லையே என்பதால் ஆளுநர் பெரும்பான்மையை முதலில் நிரூபியுங்கள், அதன்பிறகு அழைக்கிறேன் எனக் கூறி தவெகவை அழைக்கவில்லை. இந்த விஷயத்தில் போதிய முன்அனுபவமில்லாமல் தவெகவினர் தங்களுக்கான வாய்ப்பை கோட்டை விட்டுவிட்டு, ஆளுநரை குறைகூறுவது அர்த்தமற்றது” என்றனர். முன்னாள் நீதிபதி கருத்துஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதியான என். பால்வசந்தகுமார், தமிழகத்தில் தவெக தவிர வேறு எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க உரிமை கோராத நிலையில், தவெகவை ஆட்சி அமைக்கும்படி ஆளுநர் அழைக்காமல் இருப்பது ஜனநாயக சட்டவிரோதம், என கருத்து தெரிவித்துள்ளார். இதேபோல தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினரான வழக்கறிஞர் எம்.வேல்முருகன் தமிழக ஆளுநரின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.* தமிழகத்தில் எந்தக் கட்சியும் 118 தொகுதிகளை பெற்றிருக்கவில்லை எனில் அரசியலமைப்பு சட்டத்தின் 4 வழிமுறைகளை பின்பற்றி ஆளுநர் அழைப்பு விடுக்கலாம்.* தேர்தலுக்கு முன்பே அரசியல் கட்சிகள் ஒன்றாக சேர்ந்து கூட்டணி அமைத்திருந்தால் அந்த கூட்டணியை அழைக்கலாம்.* அதிக இடங்களை கைப்பற்றியுள்ள கட்சி போதிய ஆதரவுடன் இருந்தால் அந்த கட்சிக்கு அழைப்பு விடுக்கலாம்.* தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெற்ற கட்சிகள் தங்களுக்குள் கூட்டணி அமைத்து இருந்தால் அந்த கட்சிகளை அழைக்கலாம்.* வெளியில் இருந்து பெறப்படும் ஆதரவுடன் பெரும்பான்மையற்ற மைனாரிட்டி ஆட்சியை அமைக்கும் கட்சியை அழைக்கலாம்.* தற்போது விஜய் அதிக இடங்களை கைப்பற்றியுள்ள கட்சி என்ற அடிப்படையில் ஆட்சியமைக்க உரிமை கோராமல் கூட்டணி ஆட்சி எனக்கூறி காங்கிரஸ் ஆதரவு கடிதத்தையும் சேர்த்து ஆளுநரிடம் கொடுத்ததுதான் வாய்ப்பை நழுவ விட்டதற்கான முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

## விஜய் விவகாரம்: ஆளுநருக்கு எதிராக தமிழக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு



சென்னை: மே,09

“தனிப்பெரும் கட்சியான தவெகவை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காததை கண்டித்து நாளை (மே 08) காலை 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும்” என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.இது குறித்து காங்கிரஸ் மாவட்ட கமிட்டி தலைவர்களுக்கு அவர் எழுதிய கடிதம்: 2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களின் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன் ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ணா சாலை, தாராப்பூர் டயர் அருகில் நாளை காலை 11 மணியளவில் எனது தலைமையில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் திட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு



சென்னை: மே,09

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியீடு தள்ளிப்போக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், நாளை மே 8-ம் தேதி திட்டமிட்டபடி தேர்வு முடிவுகள் வெளியாகும் என்று அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரகம் தெரிவித்துள்ளது. தமிழக பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் 2 முதல் 26-ம் தேதி வரை நடைபெற்றது. இத்தேர்வை மாநிலம் முழுவதும் சுமார் 8 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர். இவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஏப். 6 முதல் 20-ம் தேதி வரை நடைபெற்றது.தொடர்ந்து தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கான பணிகளை தேர்வுத் துறை மேற்கொண்டு வருகிறது. இதனால், பிளஸ்-2 பொதுத் தேர்வு முடிவுகள் ஏற்கெனவே அறிவித்தபடி மே 8-ல் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.இந்நிலையில், தேர்வு முடிவுகள் வெளியீடு சற்று தள்ளிப்போக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகின. பிளஸ் 2 விடைத்தாள் மதிப்பீடு முடிக்கப்பட்டு, மாணவர்களின் மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. எனினும், தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால் தேர்வு முடிவுகளை வெளியிட அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதனால், திட்டமிட்டபடி மே 8-ல் பிளஸ் 2 முடிவுகளை வெளியிட முடியாது என்றெல்லாம் தகவல்கள் வெளியாகின.இது பல்வேறு மேற்படிப்புகளுக்கும் விண்ணப்பிக்க ஆர்வமுடன் காத்திருந்த மாணவர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில், நாளை மே 8-ம் தேதி திட்டமிட்டபடி தேர்வு முடிவுகள் வெளியாகும் என்று அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரகம் அறிவித்துள்ளது.அதன்படி, காலை 9.30 மணிக்கு தேர்வு முடிவுகள் வெளியாகிறது.மாணவர்கள் தங்களின் மதிப்பெண் விபரங்களை, ‘ஆன்லைன்’ வழியில் தெரிந்து கொள்ளலாம். தேர்வு முடிவுகளை, https://results.digilocker.gov.in மற்றும் www.tnreuslts.nic.in ஆகிய இணையதளங்களில், தேர்வர்கள் தங்கள் பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும், தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். தேர்வு எழுதிய மாணவர்கள் அனைவரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கும், தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படும்.7845252525 என்ற வாட்ஸ் அப் எண்ணிலும் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான ஆலோசனை உதவி எண்கள்: 14417 / 104/ 14416 என்று அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரகம் அறிவித்துள்ளது.

## தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உளவுத் துறை அறிவுறுத்தல்



சென்னை: மே,09

தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உளவுத் துறை போலீஸார் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் தவெக தலைவர் விஜய் இன்னும் ஆட்சி அமைக்காத நிலையில், சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத் துறை சுட்டிக்காட்டி, இந்த அறிவுறுத்தலை வழங்கி உள்ளதாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. ஆனாலும் ஆட்சி அமைக்க குறைந்தது 118 எம்எல்ஏக்கள் தேவை என்பதால் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் தவெக உள்ளது. எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காததால், கூட்டணி ஆட்சி அமைப்பதில் தவெக மும்முரம் காட்டி வருகிறது.சுயேச்சை வேட்பாளர்கள் யாரும் இல்லாத நிலையில், 5 எம்எல்ஏக்களை வைத்துள்ள காங்கிரஸ் உடன் தவெக கைகோத்துள்ளது. இதனால் தவெகவின் பலம் 113 ஆக உயர்ந்துள்ளது. தற்போது விசிக மற்றும் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவை தவெக கேட்டுள்ளது. ஆதரவு அளிப்பது தொடர்பாக கம்யூனிஸ்ட்கள், விசிக ஆலோசித்து வருகின்றன.அதிமுக எம்எல்ஏக்கள் அனைவரும் புதுச்சேரியில் முகாமிட்டுள்ளனர். திமுகவும் தனியாக எம்எல்ஏ கூட்டத்தை நடத்துகிறது. இதனால் தமிழக அரசியல் களம் பரபரப்பாக காணப்படுகிறது. இந்நிலையில், ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விஜய்க்கு முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க வலியுறுத்தியும் மெரினா கடற்கரையில் தவெகவினர் திரள உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இதையடுத்து போலீஸார் அந்தப் பகுதிகளில் அதிகளவில் நிறுத்தப்பட்டு, கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளனர்.

# கலை, இலக்கியம், சமூகசேவை மற்றும் பொதுவிவகாரம் போன்ற துறைகளில் சிறந்த பங்களிப்பினை செய்து வருபவர்கள் பத்ம விருது விண்ணப்பிக்கலாம்

## திண்டுக்கல் கலெக்டர் தகவல்




திண்டுக்கல், மே. 098–

தேசத்தின் உயரிய அங்கீகாரமிக்க விருதான பத்ம விருதுகள்2027 கலை, இலக்கியம், விளையாட்டு, சமூக சேவை, கல்வி, மருத்துவம், பொதுவிவகாரம் போன்ற துறைகளில் நீண்ட நாட்களாக சிறந்த பங்களிப்பினை செய்து வரும் நபர்களுக்கு ஆண்டு தோறும் குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது. பால், இனம், மதம் பேதமின்றி தேசத்தின் அனைத்து குடி மக்களுக்கும் சம உரிமை தந்து சேவைக்கும், திறமைக்கும் மட்டுமே மதிப்பளித்து இவ்விருது வழங்கப்படுகிறது.

எனவே, 2027ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கான தகுந்த கருத்துருக்கள் வரவேற்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் கலை, இலக்கியம், விளையாட்டு, சமூக சேவை, கல்வி, மருத்துவம், பொதுவிவகாரம் போன்ற துறைகளில் சிறந்த பங்களிப்பினை செய்து வரும் தனிநபர்கள் தங்களின் கருத்துருக்களை https://awards.gov.in என்ற இணையதளத்தில் 31.07.2026ஆம் தேதிக்குள் பதிவு செய்து அசல் கருத்துருவினை அறை எண்.88, மாவட்ட ஆட்சியர் வளாகம், திண்டுக்கல் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகரக் காவல் துறையின் புது முயற்சியாக பொதுமக்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காகவும் குற்றங்களை கண்காணிக்கவும் கேபிள் டிவி ஆப்ரேட்டர்களின் உதவியோடு ராசி சீட்ஸ் நிறுவனத்தின் நிதி உதவி மூலம் இன்டர்நெட் இல்லாமல் கேபிள் இணைப்பு மூலம் ஆர்.எஸ்.புரம் பகுதிகளில் உள்ள சுமார் 350 கேமராக்களை கோவை மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே கண்காணிப்பதற்காக ஏற்பாடு செய்து காவல் ஆணையர் கண்ணன் துவக்கி வைத்தார் . மேலும் இனிவரும் காலங்களில் கோவை மாநகரில் உள்ள அனைத்து முக்கிய இடங்கள் மக்கள் கூடும் இடங்கள் மற்றும் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றில் உள்ள கேமராக்களை இதே போன்று இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இதன் மூலம் நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு முக்கிய இடங்களை காவல்துறையின் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வருவதோடு குற்ற தடுப்பு நடவடிக்கையை முனைப்புடன் செயல்படுத்தவும் நடைபெற்ற குற்றங்களை விரைவாக கண்டறியவும் முடியும் என்பதை கோவை மாநகர காவல்துறை சார்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

### எ.வ.வேலு வெற்றியை எதிர்த்து வழக்கு தொடரப்படும்

# வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டத்தில் தவெக வேட்பாளர் அருள்ஆறுமுகம் உறுதி




திருவண்ணாமலை, மே. 09–

எ.வ.வேலு வெற்றியை எதிர்த்து வழக்கு தொடரப்படும் என திருவண்ணாமலையில் நடந்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டத்தில் தவெக வேட்பாளர் அருள்ஆறுமுகம் தெரிவித்தார்.

திருவண்ணாமலை காந்திசிலை அருகில் தவெக சார்பில் நன்றி அறிவிப்பு கூட்டம் தவெக மாநில மருத்துவரணி இணை ஒருங்கிணைப்பாளர் எம். ஹரி தலைமையில் நடந்தது. இதில்தவெகசார்பில் திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட உழவர் உரிமை இயக்க மாநில தலைவர் அருள்ஆறுமுகம் கலந்து கொண்டு பேசுகையில் திருவண்ணா மலை மாவட்டத்தில் உள்ள ஆட்சியர் எஸ்பி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் எ.வ.வேலுவின் ஆதரவாளர்களாக இருக்கின்றனர் அவர்களால் என் வெற்றி பறிக்கப்பட்டு ள்ளது.மக்கள் தவிர அரசு அதிகாரிகள் ஊழியர்கள் என ஏராளமானோர் தவெகவுக்கு தபால் ஓட்டு அளித்தனர். ஆனால் ஆயிரக்கணக்கான ஓட்டுகளை மோசடி செய்திருக்கின்றனர். ஓட்டு திருட்டு நடந்திருக்கிறது இதற்கான ஆதாரம் எங்களிடம் இருக்கி றது. இதுதொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர இருக்கிறோம். எ.வ.வேலு எம்எல்ஏவை நீதிமன்றத்தில் சந்திப்போம் அவர்மீது வழக்கு தொடருவோம் இந்த தொகுதியில் நான் வெற்றிபெறாவிட்டாலும் நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை தவெக தலைவர் விஜயிடம் சொல்லி பாடுபடுவோம் உள்ளூர் மக்கள் அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு செல்ல தனி வழி ஏற்படுத்தி தருவோம் இவ்வாறு அவர் பேசினார்.


இந்த நன்றி அறிவிப்பு கூட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் தட்சினாமூர்த்தி தவெக நிர்வாகிகள் அண்ணாமலை அரவிந்த் உள்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை நகரைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு மாணவன் ஹர்ஷித் ராஜலிங்கம், தந்தையை இழந்த சோகத்திலும் பள்ளி அளவில் 2ஆம் இடம் பிடித்து அனைவரையும் நெகிழ்ச்சியடைய வைத்துள்ளார்.பொதுத்தேர்வு எழுதி வீடு திரும்பிய நாளிலேயே அவரது தந்தை செந்தில் திடீர் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. அந்த துயரத்தையும் தாண்டி தற்போது வெளியான +2 பொதுத்தேர்வு முடிவில் ஹர்ஷித் ராஜலிங்கம் 600க்கு 582 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் இரண்டாம் இடம் பிடித்துள்ளார். மென்பொருள் துறையில் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்பதே என் தந்தையின் ஆசை. அந்த ஆசையை நிறைவேற்ற நான் தொடர்ந்து முயற்சி செய்வேன் என்று மாணவன் உருக்கமாக தெரிவித்துள்ளார்.சோகத்தை சாதனையாக மாற்றிய ஹர்ஷித் ராஜலிங்கத்தின் மனவலிமைக்கு சமூக வலைதளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# குடியாத்தம் கெங்கையம்மன் கோயில் சிரசு ஊர்வல திருவிழா

## 15.05.2026 அன்று வேலூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை!!



வேலூர், மே. 09–

குடியாத்தம் ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் சிரசுஊர்வலதிருவிழாவை முன்னிட்டு 15.05.2026 அன்று வேலூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்பு லெட்சுமி. தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் மற்றும் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ் வாய்ந்த ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் சிரசு ஊர்வல திருவிழா 15.05.2026 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளதால்,

அவ்வமையம் பொது மக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏனையோர் கலந்துக்கொள்ள வசதியாக, குடியாத்தம் ஸ்ரீகெங்கையம்மன் திருக்கோயில் சிரசு ஊர்வல திருவிழா நடைபெறும் நாளான 15.05.2026 ஆம் தேதி வெள்ளிக்கிழமை வேலூர் மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. அதற்கு பதிலாக 06.06.2026 அன்று சனிக்கிழமை அரசு அலுவலர்களுக்கு வேலை நாளாகவும்.

07.06.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை அச்சக பணியாளர்களுக்கு வேலை நாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

2) இந்த உள்ளூர் விடுமுறை நாள், செலவாணி முறிச் சட்டம் 1881 (Under Negotiable Instruments Act, 1881) ன் கீழ் வராது என்பதால் மேற்படி உள்ளூர் விடுமுறை நாளான 15.05.2026 அன்று கருவூலங்களிலும்,

சார்நிலை கருவூலங்களிலும் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, தெரிவித்துள்ளார்.

### தருமபுரியில்

# இடதுசாரி கட்சிகள் மற்றும் விசிக கண்டன ஆர்ப்பாட்டம்




தருமபுரி, மே. 08–

தருமபுரி மாவட்ட இடதுசாரி கட்சிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தருமபுரி பி எஸ் என் எல் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வணிக சிலிண்டர்விலைஉயர்வை திரும்ப பெற வலியுறுத்தியும், ரயில்வே துறையில் ஆட் குறைப்பு செய்வதை கைவிடகோரியும் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் விடுதலை சிறுத்தை கட்சியின் தருமபுரி மைய மாவட்ட செயலாளர் த. கு . பாண்டியன், கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன், சிசுபாலன் மற்றும் இடதுசாரி, விடுதலை சிறுத்தை கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில்

# உலக தடகள தின விழா



கோவை, மே. 09–

உலக தடகள தினத்தை முன்னிட்டு கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படிக்கும் நரசீபுரம் ச.அஸ்வின் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை மும்முறை நீளம் தாண்டுதல் பொதுப் பிரிவில் 12.91 மீட்டர் தாண்டி மூன்றாம் இடம் பிடித்ததை பாராட்டி தொண்டாமுத்தூர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் நினைவு நற்பணி மன்றம் சார்பில் மன்றத் தலைவர் மா.சிவக்குமார் தலைமையில் பொன்னாடை அணிவித்து இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நரசிபுரம் கே.உதயகுமார் இனிப்பு வழங்கினார் தொண்டாமுத்தூர் தமிழ் இலக்கிய பேரவை தலைவர் வெ.பூ. பழனிச்சாமி செயலாளர் சுப்புதர்மன் பொருளாளர் என். சிவசண்முகம் டி.ஏ. சுப்பிரமணியம் இந்திய மனிதநேய விருதாளர் ஷைனி சிவக்குமார் சி.நிவேதா எம். சோமசுந்தரம் நரசீபுரம் எஸ் சங்கர் அமராவதி பா . வின்சி நடத்துனர் காளிச்சாமி உட்பட பலர் கலந்து கொண்டு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# கோடை வெப்பத்தால் ஏற்படும் மகசூல் இழப்புகளை குறைத்துக்கொள்ளுமாறு கலெக்டர் வலியுறுத்தல்



விழுப்புரம், மே. 09–

விழுப்புரம் மாவட்டத்தில் கோடை வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் நெல், கரும்பு, மக்காச்சோளம், நிலக்கடலை, எள், காய்கறிகள் மற்றும் பழப்பயிர்களை வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயிகள் நிலத்தில் உள்ள மண் ஈரப்பதத்தை பாதுகாக்க வயல்களில் பயிர்களுக்கிடையே காற்றோட்டத்தை அதிகப்படுத்துதல், வைக்கோல், கரும்புத்தோகை, தென்னை நார் கழிவு மற்றும் பாலித்தீன் மூடாக்கு போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

இதன் மூலம் மண் வெப்பநிலை குறைந்து நீர் ஆவியாகும் அளவு குறையும்.

மேலும், சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறைகளை அதிகமாகப் பயன்படுத்தி குறைந்த நீரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பில் பாசனம் செய்யலாம், காலை மற்றும் மாலை நேரங்களில் மட்டுமே நீர் பாசனம் மேற்கொள்ள வேண்டும். நெற்பயிர்களில் 3 செ.மீ அளவிற்கு நீர்பராமரித்தல் போதுமானது.

இலை வெப்பத்தை குறைக்க 3 சதவீத கயோலின் கரைசல் அல்லது 1 சதவீத பொட்டாசியம் குளோரைடு கரைசலை தெளிக்கவும். அதேபோல் PPFM (இளஞ்சிவப்புநிறமி மெத்தைலோபாக்டீரியா) உயிர் நுண்ணுயிரி கரைசலை தெளிப்பது பயிர்களின் வறட்சி தாங்கும் திறனை அதிகரிக்கும்.

கரும்பு பயிர்களில் தோகை மூடாக்கு அமைப்பதுடன், 2.5 சதவீத யூரியா மற்றும் 2.5 சதவீத பொட்டாஷ் கரைசலை இலை வழியாக தெளிக்கலாம் மற்றும் மண் ஈரப்பதத்தைப் பாதுகாக்க கடைசி உழவின் போது ஏக்கருக்கு 10 டன் என்ற அளவில் தென்னை நார் கழிவினை அடி உரமாக மண்ணில் இட்டு உழவு செய்ய வேண்டுமென வேளாண்மை நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர். மக்காச்சோளம் பயிரில் தானிய நிரப்புதலை மேம்படுத்த "TNAU Maize Maxim" நுண்ணூட்ட கலவையினை பயன்படுத்தலாம்.

நிலக்கடலை பயிரில் வெப்பத்தால் நிலத்தில் ஈரப்பதம் குறைவதை தடுப்பதற்காக ஜிப்சம் இடுதல் மற்றும் பாலித்தீன் படல மூடாக்கு பயன்படுத்தலாம்.

மேலும், பூக்கள் உதிர்வதை குறைக்கவும் காய்கள் நன்கு திரளவும் அதிக பட்ச பூக்கும் மற்றும் காய்ப்பிடிக்கும் பருவத்தில் 200 லிட்டர் நீரில் 2 கிலோ என்ற அளவில் TNAU நிலக்கடலை ரிச் கலந்து இலை வழி தெளிப்பாக தெளிக்கலாம். வாழை, வெண்டைக்காய் மற்றும் கத்திரிக்காய் போன்ற பயிர்களில் பூ மற்றும் காய் உதிர்வை கட்டுப்படுத்த பொட்டாசியம் நைட்ரேட், போரான் மற்றும் நுண்ணூட்ட கலவைகள் தெளிக்கலாம்.

மா பயிரில் காய் பிடிப்பை அதிகரிக்கவும், பழங்கள் உதிர்வினை குறைக்கவும் கடுகு அளவு காய் பருவத்தில் 2 சதவீதம் பொட்டாசியம் நைட்ரேட் இலை வழி தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

கோடை வெப்பத்தின் போது விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மதியம் 12 மணி முதல் 3 மணி வரை நேரடி வெயிலில் வயல்வெளி பணிகளை மேற்கொள்வதையும் மற்றும் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதையும் தவிர்க்க வேண்டும், போதுமான அளவு தண்ணீர் அருந்தி உடல் நலத்தைபாதுகாக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வானிலை தகவல்கள் மற்றும்தொழில்நுட்ப ஆலோசனைகள்விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி, பயிர் வாரியான அறிவியல் ஆலோசனைகளை பெற்று செயல்பட்டு, கோடை வெப்பத்தால் ஏற்படும் மகசூல் இழப்புகளை குறைத்துக்கொள்ளு மாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான். தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் கணேஷ் குமாரை, தமிழ்நாடு விவசாயிகள் நலன், மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஓய்வு பெற்ற உதவி இயக்குனர் நா.அறவாழி, பாட்டாளி மக்கள் கட்சி மாநில மகளிர் அணி மாநில துணைத்தலைவர் பாரதி அறவழி, விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற வனத்துறை அலுவலர் மேல்களவாய் நா.ஜெயபால், பணப்பாக்கம் சரவணன், தலவனூர் செல்வமணி, அரங்கநாதன், மேல்பாப்பாம்பாடி பாண்டியன், மேல்எடையாளம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வமணி, ஏற்பாட்டில் 07.05.2026, அன்று மாலை செஞ்சி குபேரன் கோவில் அருகில் சந்தித்து, சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். நந்தன் கால்வாய் மற்றும் அனைத்து நீர் நிலைகளையும் குடிமராமத்து செய்து பராமரிக்க ஆவண செய்யுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது.

# தமிழ்நாடு சபரிமலை அய்யப்ப சேவா சமாஜத்தின் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கூட்டம்



திருவண்ணாமலை, மே. 09–


தமிழ்நாடு சபரிமலை அய்யப்ப சேவா சமாஜத்தின்திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கூட்டம் செங்கம் சாமி ஐயப்பன் ஆலயத்தில் மாவட்டத் தலைவர் ரவி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சி சிறப்பு அழைப்பாளராகமாநில அமைப்புச் செயலாளர் செங்கம் ராஜா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி செய்ய வேண்டிய பணிகள் குறித்து வழி காட்டினார் தெற்குமாவட்டத்தில் உள்ள 9 ஒன்றியத்தில் 5 ஒன்றியம் 1நகராட்சி பேரூராட்சியில் கமிட்டி அமைக்கப்பட்டது. செங்கம்நகரில்நேருநகர் காமராஜர் பகுதி கிளை கமிட்டி அமைக்கப்பட்டது.

ஜுன் மாதம் எரிமேலியில் அன்னதானம் செய்வது தெற்கு மாவட்டம் சார்பாக குருசாமிகள் சங்கமம் நடத்துவது எனவும் தீர்மானி க்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில்பொதுச்செயலாளர் கிருஷ்ணமூர்த்திமாநில செயலாளர் முருகேசன் இணைச் செயலாளர் ஹரிகிருஷ்ணன் மாவட்ட துணைத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி கோவிந்தராஜ் குமரன் பவியரசன் நடராஜ் செல்வராஜ் செயலானர்கள் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# விவசாயிகள் வெப்பத்தைத் தாங்கும் பயிர் மேலாண்மை உத்திகளை பயன்படுத்த வேண்டும்

## கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தகவல்



கிருஷ்ணகிரி, மே. 09–

கோடைஉழவு:கோடை மழையைப் பயன்படுத்தி சரிவுக்குக் குறுக்காக நிலத்தை உழவு செய்வதன் மூலம் மண்ணின் ஈரப் பதத்தைச் சேமிக்கலாம்.

வெப்பத்தைத் தாங்கும் இரகங்கள்: அதிக வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடிய பயிர் இரகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பயிர் சுழற்சி மாற்றம்: வெப்ப அலை வீசும் காலங்களில் (பொதுவாக ஏப்ரல் ஜூன்) விதைப்பு நேரத்தை மாற்றுவது அல்லது பயிர் சுழற்சியை மாற்றுவது அவசியம்.

நிலப் போர்வை அல்லது மூடாக்கு: மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைக்க காய்ந்த இலைகள், வைக்கோல் பயன்படுத்தி மூடாக்கு போட வேண்டும்.

நிழல் வலைகள்: பயிர்களை நேரடி சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்க நிழல் வலைகளைப் பயன்படுத்தலாம்.

கயோலின்தெளிப்பு: 5% காயோலின் (Kaolin) கரைசலைத் தெளிப்பதன் மூலம் இலைகளின் வெப்பநிலையைக் குறைத்து, அதிகப்படியான நீராவிப்போக்கைத் தடுக்கலாம்.

கடல்பாசிசாறுகள்: அஸ்கோபில்லம் நோடோசம் (Ascophyllum nodosum) எனப்படும் மற்றும் கடல்பாசியிலிருந்து பெறப்படும் உயிர் ஊக்கிகளில் மேனிடால் பாலிசாக்கரைடுகள் நிறைந்துள்ளன. இவை பயிர்களில் உள்ள நச்சுத் தனிமங்களை சமநிலைப் படுத்துவதுடன், உச்சி வெயில் நேரத்திலும் இலைகளின் வெப்பநிலையை சீராகவும், குளிர்ச்சியாகவும் வைத்திருக்க உதவுகின்றன. பூசா ஹைட்ரோஜெல் (Pusa Hydrogel): இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் (IARI) உருவாக்கப்பட்ட ஒரு உறிஞ்சும் பாலிமர் ஆகும். இது மண்ணில் நீரைச் சேமித்து வைத்து, தாவரங்களுக்குத் தேவைப்படும்போது மெதுவாக வெளியிடும் திறன்கொண்டது.

செயல்பாடு: இது தனது எடையை விட பல மடங்கு அதிக நீரை உறிஞ்சி சேமிக்கும். இதனால் வறட்சி காலங்களிலும் பயிர்கள் காய்ந்து விடாமல் வளர உதவுகிறது.

பயன்பாடு: ஒரு ஏக்கருக்கு சுமார் 1 முதல் 25 கிலோ வரை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இது மண்ணில் ஒரு வருடம் வரை செயல்படும். அதன் பிறகு தானாகவே மட்கிவிடும்.

நன்மைகள்: நீர்ப்பாசனத் தேவையைக் குறைக்கிறது (சுமார் 4050% நீர் சேமிப்பு). உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி கள் நீரில் கரைந்து வீணாவதைத் தடுக்கிறது. மண்ணின் ஈரப்பதத்தைத் தக்க வைத்து விளைச்சலை அதிகரிக்கிறது.

வடிவம்:இது பொதுவாக குருணை (Granules) வடிவில் கிடைக்கிறது. நீர் மேலாண்மை சொட்டு நீர்ப்பாசனம்: நீர் இழப்பைக் குறைத்து, வேர்ப்பகுதியில் நேரடி நீர் வழங்க சொட்டுநீர்ப்பாசனம் சிறந்தது. பாசன நேரம்:நீர் ஆவியாவதைத் தடுக்க காலை அல்லது மாலை வேளைகளில் பாசனம் செய்ய வேண்டும்.


தெளிப்பு நீர் பாசனம்: பயிர்களின் மேல் நீர் தெளிப்பதன் மூலம் பயிர் சூழலில் வெப்பத்தைக் குறைக்கலாம் பயிர்களுக்கான தெளிப்பு: பயிர்களுக்கு வெப்பத்தைத் தாங்க பிங்க் பிக்மென்டட் மெத்திலோட்ரோபிக்(PPFM200mlஏக்கர்) தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறதமா மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களில் அதிக வெப்பத்தால் ஏற்படும் பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்வதைத் தவிர்க்க 3% பஞ்சகாவ்யா கரைசலைத் தெளிக்கலாம்.

மல்லிகை: வெப்பத்தைத் தாங்கி அதிக மலர்கள் பூக்க 3% பஞ்சகாவ்யா மற்றும் 0.4% ஹ்யூமிக் அமில (Humic acid) கரைசலை மாதம் ஒருமுறை தெளிக்கலாம்.

தென்னை: கருந்தலைப் புழுக்களின் தாக்கத்தைத் தவிர்க்க ஏக்கருக்கு 2100 பிராக்கனிட் (Braconid) ஒட்டுண்ணிகளை வெளியிடலாம். ஒவ்வொரு மரத்திற்கும் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் நீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வாழை: கோடை காற்றால் வாழை மரங்கள் சாய்வதைத் தடுக்க 5 மாதங்களுக்குமேலான மரங்களுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும்.

மண்ணின் உப்புத் தன்மை (SalinityManagement):கோடையில் நிலத்தடி நீர் மட்டம் குறையும் போது நீரின் உப்புத்தன்மை அதிகரிக்கும். இதைத் தவிர்க்க அடிக்கடி நீர்பாய்ச்சுவதுடன், இலைகளின் ஓரங்கள் கருகினால் தகுந்த நுண்ணூட்டச் சத்துக்களைவழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியானதையொட்டி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் தேர்வு முடிவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன் நேற்று வெளியிட்டார். இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருவளர்ச்செல்வி, மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் உதயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### ஊத்தங்கரையில்

# ஸ்ரீ முனியப்பன் கோவிலில் புதிய நவகிரக கோபூர மஹா கும்பாபிஷேக திருவிழா



ஊத்தங்கரை, மே. 09–

ஊத்தங்கரை ஸ்ரீ முனியப்பன் கோவிலில் புதிய நவகிரககோபூரமஹாகும்பாபிஷேக திருவிழா கொங்கு வெள்ளாளக் கவுண்டர்கள் சமுதாயம் மற்றும் ஸ்ரீ மகா முனியப்பன் கொங்கு இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம்ஊத்தங்கரை ஸ்ரீ மகா முனியப்பன் கோவில் வளாகத்தில் உள்ள புதிய நவக்கிரக கோபுர சன்னதிக்கு, நிகழும் சுப ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை இன்று சஷ்டி திதி, உத்திராடம் நட்சத்திரம் சித்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 09.00 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் புதிய நவக்கிரக கோபுரத்திற்கு கும்பாபிஷேக விழா வேத பண்டிதர்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலை வேள்வியில் அக்கினி பகவானுக்கு சமர்ப்பிக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து புனித நீர் அடங்கிய கலசங்கள் சால கோபுர மண்டபத்தின் மீது எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள கலசங்கள் மீது ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைதொடர்ந்து கும்பாபிஷேக விழாவின் இறுதியாக வருகை புரிந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இத்திருவிழா கோயில் தர்மகர்த்தா என்.எஸ் மணி தலைமையில் கொங்கு அறக்கட்டளை தலைவரும் அதிமுக மத்திய ஒன்றிய கழக செயலாளருமான திருஞானம் முன்னிலையில் நடந்தது.

இதில் சி.ஏ.கே சந்திரசேகர், பிரசன்ன மூர்த்தி, பொருளாளர் கருப்புசாமி, செயலாளர் வழக்கறிஞர் செல்வகுமார், கொங்கு இளைஞர் அணி தலைவர் சம்பத், கொங்கு இளைஞர் அணி செயலாளர் ரவி, பொருளாளர் மணி மற்றும் நிர்வாகிகள் சங்கீதா மணி, ஏ.ஆர். எஸ் பங்க் ராஜ் , சேகர், ராஜா, பெரிய சாமி, சிவ சக்திவேல், நடராஜ், கல்லூர் சுப்பிரமணி, சிவசக்தி பழனிசாமி, ரமேஷ், வெங்கட், என்.பி.கே பிரகாஷ், காளியண்ணன், தாபா சசி , உள்ளிட்ட கொங்கு வெள்ளாளர் கவுண்டர்கள் சமுதாயம் மற்றும்ஸ்ரீமகாமுனியப்பன் கொங்கு இளைஞர் அணி அறக்கட்டளை ஏற்பாட்டில் அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ் செல்வம், மாவட்டத் துணைச் செயலாளர் சாகுல் ஹமீது, நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் வேடி, வேங்கன், முன்னாள் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன் முன்னாள் நகர செயலாளர் சிவானந்தம் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# பார்வைத்திறன் குறையுடையோருக்கான மாணவர் சேர்க்கை

## சிவகங்கை மாவட்ட கலெக்டர் தகவல்





சிவகங்கை, மே. 09–

சிவகங்கை நகரில் உள்ள பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப் பள்ளியில் 20262027 ஆம் கல்வியாண்டிற்கென, ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில், 6 வயது முதல் 14 வயது வரை உள்ள பார்வையற்ற, குறை பார்வையுடைய மாணவ மாணவிகள் சேர்க்கை பெற்று பயிலலாம்.

மேலும், விடுதி சார்ந்த இப்பள்ளியில் உணவு, உடை இலவசமாக வழங்கப்படும். கல்வி உதவித் தொகையும், நான்கு இணை சீருடைகளும் வழங்கப்படும். இப்பள்ளியில் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பிரெய்லி முறையில் கல்வியுடன் உடற்கல்வி மற்றும் கணினி பயிற்சியும் கற்பிக்கப்படுகிறது. விடுதியில் பார்வையற்ற, குறைபார்வையுடைய மாணவர்களை கனிவுடன் கவனிக்க விடுதி பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பார்வைத்திறன் குறையுடையோருக்கானஅரசுதொடக்கப் பள்ளியில் சேர்க்கை பெற விரும்பும் மாணாக்கர்கள், தலைமையாசிரியர், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு தொடக்கப்பள்ளி, இளையான்குடி சாலை, அம்பேத்கர் சிலை அருகில், சிவகங்கை630561 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 7010498011, 9894945457 ஆகிய அலைபேசிஎண்களிலோ அல்லது 04575 240458 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.




2026ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள், இந்திய தேர்தல் ஆணையத்தினால் தளர்வு செய்யப்பட்டதனையடுத்து, திருவள் ளூர் மாவட்டம். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் பிரதி வாரம் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டமானது மாவட்டஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் எதிர் வரும் 11.05.2026முதல்காலை10.00மணிஅளவில்நடைபெறும் என்றும் இக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப். தெரிவித்துள்ளார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# பிளஸ் 2 பொதுத்தேர்வில் அரசு பள்ளி மாணவமாணவிகள் சாதனை

## கடந்த ஆண்டை விட தேர்ச்சி சதவீதமும் அதிகரிப்பு

தஞ்சாவூர், மே.09–

தமிழகத்தில் நேற்று பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவு வெளியிடப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் 105 அரசு பள்ளிகள், 40 அரசு உதவி பெறும் பள்ளிகள், 84 தனியார் பள்ளிகள் என 229 பள்ளிகளை சேர்ந்த 25944 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர்.

இதில் 25215 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றனர் .

தேர்ச்சி சதவீதம் 97.19 ஆகும். மாவட்டத்தில் 105 அரசு பள்ளிகளில் மட்டும் 4279 மாணவர்கள், 5897 மாணவிகள் என மொத்தம் 10176 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர்.

இதில் 4002 மாணவர்கள், 5744 மாணவிகள் என 9746 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி சதவீதம் 95.77 ஆகும். கடந்த ஆண்டில் அரசு பள்ளிகளில் மாணவ மாணவிகளின் தேர்ச்சி சதவீதம் 93.69 ஆகும்.

இம்முறை கடந்த ஆண்டை விட அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது . தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மேலும் தஞ்சாவூர் வருவாய்மாவட்டத்தில்உள்ள அரசு பள்ளிகள் கடந்த ஆண்டில் 12ம் இடத்தைப் பிடித்தது.

ஆனால் இந்த ஆண்டில் மாநில அளவில் 7ம் இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது. இது தவிர வருவாய் மாவட்ட அளவில் 23 அரசு பள்ளிகளில் மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

## மாநில அளவில் தஞ்சை மாவட்டம் 7வது இடம்

கடந்த 202324ம் கல்வி ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 93.46 சதவீதம் மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 26வது இடத்தையும், கடந்த 202425ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 95.80 சதவீதம் மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று 13வது இடத்தையும்பிடித்தது. ஆனால் இந்த ஆண்டில் 97.19 சதவீத மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 7ம் இடத்தைப் பிடித்து தஞ்சை மாவட்டம் சாதனை படைத்துள்ளது.

## கலெக்டர் பாராட்டு



மாநில அளவில் தஞ்சை மாவட்டம் 7 வது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளது. இதற்கு காரணமாக இருந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வெ. பேபி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஆகியோரை மாவட்ட கலெக்டர் பா. பிரியங்கா பங்கஜம் அழைத்து பாராட்டினார்.



**திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளியில் உள்ள கொங்கு மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல் பள்ளியில் பயின்ற மாணவி S.இந்துஜா, பிளஸ் 2 பொதுத்தேர்வில் 541 மதிப்பெண்கள் பெற்று சிறப்பான தேர்ச்சி பெற்றுள்ளார்.**

# வீரபாண்டிய கட்டபொம்மன் விழா

## தமிழக அரசு சார்பில் கலெக்டர், எஸ்பி மரியாதை செலுத்தினர்



தூத்துக்குடி, மே. 09–

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தாலுகா பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு கோட்டையில் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு நேற்று (08.05.2026), மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன்,மற்றும்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சி.மதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

"மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் வீரவரலாறு"

பாஞ்சாலங்குறிச்சியில் ஜெகவீர கட்டபொம்மன் மற்றும் ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்கு மகனாக 1760ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தார்.

கட்டபொம்மன் வீரசக்கம்மாள் என்பவரை மணமுடித்தார். கட்டபொம்மன் பிப்ரவரி 2ஆம் தேதி. 1790ஆம் ஆண்டில் 47வது பாளையக்காரராக அரியணை பொறுப்பை ஏற்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் அரியணை பொறுப்பை ஏற்ற அதே சமயத்தில் ஆங்கிலேயர்கள் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவில் தொடங்கினர்.

பாளையக்காரர்கள் அனைவரிடமிருந்து கப்பம் பெற்றுக்கொண்ட ஆங்கிலேயர்களால் கட்டபொம்மனிடம் தங்கள் சர்வாதிகாரம் பலிக்காமல் அவமானம் அடைந்தனர். அதனால் சமாதானம் பேசுவது என்ற போர்வையில் கட்டபொம்மனுக்கு தூது அனுப்பினார்கள்.

ஜாக்சன் துரை என்பவர் வரி கட்டுமாறு கட்டபொம்மனை பணித்தார். ஆனால் கட்டபொம்மன் ஜாக்சன் துரையிடம் நாங்கள் ஏன் வரி கட்ட வேண்டும் என்று எதிர்த்துப் பேசினார். அங்கே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியாகி தகராறில் முடிந்தது. ஆங்கிலேயரின் இந்த திட்டமிட்ட வஞ்சக வலையில் சிக்காமல் தன் வீரத்திறமையால் அங்கிருந்து தப்பினார். வீரபாண்டிய கட்டபொம்மனது வீரமும், விவேகமும் சுற்றியுள்ள அனைத்துப் பாளையக்காரர்களிடம்புகழாய்ப் பரவி, அனைவர் மனதிலும் வீரத்தை விதைத்தது.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பின் கைது செய்யப்பட்டார். பின் கயத்தாறு கிராமத்தில் புளிய மரத்தடியில் விசாரணை நடத்தி கட்டபொம்மனை குற்றவாளியென ஆங்கிலேய அரசு அறிவித்தது.தன்மீதுசுமத்தப்பட்ட குற்றங்களை கட்டபொம்மன் மறுக்கவில்லை. கேட்கவுமில்லை.

மாறாக கம்பீரத்தோடு எனது தாய்மண்ணைக் காப்பதற்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராக பாளையக்காரர்களைத் திரட்டினேன். போர் நடத்தினேன் என்று முழங்கியவாறு தூக்குமேடையேறினார். தூக்குமேடை ஏறிய போதும், அவரது பேச்சில் வீரமும் தைரியமும் நிறைந்திருந்தது. அக்டோபர் 19ஆம் தேதி. 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# காரைக்குடி மகிரிஷி வித்யா மந்திர் மாவட்டத்தில் 2ம் இடம்



காரைக்குடி, மே. 09

சிவகங்கை மாவட்டம் இந்த கல்வியாண்டின் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வில் மாநிலத்தில் 2வது இடம் பெற்றுள்ளது.

2026 ஆம் கல்வியாண்டில்தமிழ்நாட்டில்பிளஸ் 2 (+2) பொதுத்தேர்வை பள்ளிகள், தனித்தேர்வர்கள், சிறைக் கைதிகள் என சுமார் 8.27 லட்சம் (8,27,475) மாணவர்கள், மாணவிகள் எழுதியிருந்தனர். சிவகங்கை மாவட்டத்தில் 83 மையங்களில் 7234 மாணவர்களும், 8829 மாணவிகளும் என மொத்தம் 16063 மாணவ மாணவிகளும், 174 பேர் தனித்தேர்வையும் எழுதுயிருந்தனர். இதனை தொடர்ந்து நேற்று மாநில பள்ளிக் கல்வித் துறை +2 தேர்வின் முடிவுகளை வெளியிட்டு உள்ளது. இதில் சிவகங்கை மாவட்டம் 96.97 சதவீதம் பெற்று தமிழத்தில் 2வது இடத்தை பெற்றுள்ளது.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி மகிரிஷி வித்யா மந்திர் பள்ளியின் மாணவர் விக்னேஷ் தமிழ்: 98, ஆங்கிலம்: 99, இயற்பியல் : 100, வேதியியல் 100, கணிதம் : 100, கணினி அறிவியல் 100, என மொத்தம் 597 / 600 மதிப்பெண்கள் முதலிடம் பெற்று மாவட்டத்தில் முதல் இடமும், மாநிலத்தில் 2 வது இடமும் பெற்றுள்ளார்.

மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் விக்னேஷ் கூறும் போது நான் இந்த மதிப்பெண்கள் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த பள்ளி தாளாளர்,

ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். மேலும் நான் பொழுது போக்கிற்கு நண்பர்களுடன் விளையாடினாலும் படிக்கும் போது படிப்பில் கவனமாக படித்து விடுவேன் என்றும், இரவு நேரங்களில் படிக்கும் போது தனது அம்மா கண் விழித்து தனக்கு உதவியாக இருந்தார்கள் என்றும் எனது விருப்பமாக மேற்படிப்பாக தொழில் நுட்ப பிரிவில் கல்லூரியில் சேர்ந்து படிக்கப் போவதாகவும் கூறினார்.

# தருமபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநில, மாவட்ட அளவில் சாதனை



தருமபுரி, மே. 09

தருமபுரி நகரில் உள்ள செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் +2 பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தனர்.

இந்தப் பள்ளியின் மாணவி ஹரிவாஷினி 597 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் இரண்டாம் இடமும், பள்ளி அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். அதேபோன்று பள்ளியின் மாணவன் கௌதம் 594 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் இரண்டாம் இடமும், மாணவி நேனுகுமாரி, லட்சுமி பிரபா ஆகியோர் 593 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் மூன்றாம் இடமும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். 590 மதிப்பெண்களுக்கு மேல் 4 மாணவர்களும், 580 மதிப்பெண்களுக்கு மேல் 11 மாணவர்களும், 570 மதிப்பெண்களுக்கு மேல் 24 மாணவர்களும், 560 மதிப்பெண்களுக்கு மேல் 45 மாணவர்களும், 550 மதிப்பெண்களுக்கு மேல் 58 மாணவர்களும், 500 மதிப்பெண்களுக்கு மேல் 166 மாணவர்கள் மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

கணிதம் 1, உயிரியல் 1, கணினி அறிவியல் 5, கணக்கு பதிவியல் 3, பொருளியல் 4, வணிகவியல் 5, கணினி பயன்பாடு 1, மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

இந்த பள்ளியைச் சார்ந்த மாணவ , மாணவிகள் தொடர்ந்து ஐந்தாவது வருடமாக +2 பொதுத்தேர்வில் மாவட்ட மற்றும் மாநில அளவில் சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சாதனை படைத்த மாணவ, மாணவிகளை செந்தில் பள்ளி நிறுவனங்களில் தலைவர் செந்தில் கந்தசாமி, சால்வை அணிவித்து, பூங்கொத்து வழங்கி பாராட்டினார். செந்தில் குழுமத் துணைத் தலைவர் மணிமேகலை, செந்தில் குழுமங்களின் செயலாளர் தனசேகர், நிர்வாக அலுவலர் ரபிக் அஹமத், முதல்வர் வள்ளியம்மாள்,முதல்வர்(நிர்வாகம்) ஓங்காளி, மேல்நிலை பிரிவு முதல்வர் திருநாவுக்கரசன் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில்

# 19ந் தேதி முதல் 29ந் தேதி வரை ஜமாபந்தி

ராமநாதபுரம், மே. 09

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர்



சிம்ரன்ஜீத் சிங் காலோன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது :

ராமநாதபுரம் மாவட்டத்தில் 1435ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் கணக்கு முடிப்பு (ஜமாபந்தி) 19.05.2026 முதல் 29.05.2026 வரை (சனி, ஞாயிறு, திங்கள் கிழமை, பக்ரீத் அரசு விடுமுறை நீங்கலாக) வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெறவுள்ளது.

1435ம் பசலி ஆண்டு (2025 2026) கோரிக்கை தொடர்பான மனுக்களை ஜமாபந்தி அலுவலரிடம் நேரடியாகவும், https://cmhelpline.tnega.org/support/upgems/ShowHomePage.do#Cases/new , என்ற இணைய தளம் அல்லது இசேவை மையங்கள் மூலமாகவும் 19.05.2026 முதல் 29.05.2026 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும், பதிவேற்றம் செய்யப்படும் மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு தீர்வு வழங்கப்படும் என ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு, 2025 26 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட 10 வங்கிகள், 25 பள்ளிகள், 7 கல்லூரியின் JRC/YRC (Junior Red Cross Society / Youth Red Cross Society) அமைப்புகளுக்கு சிறப்பான சமூக சேவைக்கான விருதுகளையும், தமிழ்நாடு மாநில செஞ்சிலுவை கிளையின் சார்பாக, மாவட்ட செஞ்சிலுவை கிளைக்கு, 5 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், 500 பல்ஸ் ஆக்சிஜன் மீட்டர்கள், 20 முதலுதவி பெட்டிகள் ஆகிய மருத்துவ உபகரணங்களை மலை கிராமங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லிவழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, மாவட்ட கருவுல அலுவலர் பாண்டியன், திருப்பத்தூர் மாவட்ட கிளை சேர்மன் கிஷோர் பிரசாத், செஞ்சிலுவை சங்க மேலாண்மை குழு உறுப்பினர் முருகன், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையின் சிறப்பு குழந்தைகள் மற்றும்

# இளம்பருவ மனநல மையமான "மானஸ்" சார்பில் "மேதா" என்கிற புதிய திட்டம் தொடக்கம்



சேலம், மே. 09

சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனையின் சிறப்பு குழந்தைகள் மற்றும் இளம்பருவ மனநலமையமான "மானஸ்" சார்பில் "மேதா " என்கிற புதிய திட்டம் தொடங்கப்பட்டது.

குழந்தைகளின் சீரான மூளை மற்றும் மன வளர்ச்சியே சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும்" – குழந்தைகளின் மனநல பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்திய குழந்தைகள் நல நிபுணர் டாக்டர் ஆர். ராமலிங்கம் மற்றும் ஏ.வி.ஆர் சுகந்தி சுதர்சனம்; குழந்தைகளுக்கான பிரத்தியேக 'மேதா' திட்ட தொடக்க விழாவில் கருத்து "இன்றைய குழந்தைகளின் மனநலத்தை பாதுகாப்பது என்பது நாளைய சமூகத்தின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு சமம். ஒரு குழந்தையின் எதிர்காலம் அதன் மனமும் மூளையும் எவ்வாறு வளர்கிறது என்பதில்தான் அமைகிறது. பல குழந்தைகள் தங்களின் உள்ளார்ந்த போராட்டங்களை வெளிப்படுத்தத்தெரியாமல்அமைதியாக சிரமப்படுகின்றனர்" என்ற உணர்வுபூர்வமான கருத்துகளுடன், குழந்தைகளின் மூளை வளர்ச்சி, மனநலம் மற்றும் அறிவாற்றல் எதிர்காலத்தை பாதுகாக்கும் உயரிய நோக்கத்துடன், தொடங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மூத்த குழந்தைகள் நல மருத்துவர் ஆர். ராமலிங்கம் மற்றும் ஏ.வி.ஆர் சுகந்தி சுதர்சனம் ஒவ்வொரு குழந்தையிலும் தனித்திறனும் பேராற்றலும் உள்ளதாகவும், அதை அறிவியல் முறையிலும் அன்பான குடும்ப சூழலிலும் வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோரின் முக்கிய பொறுப்பாகும் என்றும் வலியுறுத்தினர். மேலும், சிறுவயதிலேயே அதிக அளவில் மொபைல் மற்றும் மின்னணு சாதனங்கள் பயன்படுத்துவது குழந்தைகளின் கவன திறன், மொழி வளர்ச்சி, கற்றல் திறன், உணர்ச்சி நிலை மற்றும் ஆளுமை வளர்ச்சியை தீவிரமாக பாதிக்கக்கூடும் என எச்சரித்தனர். இந்திய குடும்ப மதிப்புகள் மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறைகள் குழந்தைகளின் மன நல பாதுகாப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் தெரிவித்தனர். சேலம் காந்தி சாலையில் செயல்பட்டு வரும் "மானஸ்" கடந்த 7 ஆண்டுகளாக குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கான மனநல மற்றும் மூளை செயல்திறன் வளர்ச்சி சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது.

இதுவரை 10,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் இம்மையத்தின் மூலம் பயனடைந்து ள்ளனர். குழந்தைகளின் அறிவாற்றல், நடத்தை மற்றும் பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்களால் எளிதில் கண்டறிய முடியாத மூளை நரம்பியல் மற்றும் மன வளர்ச்சி குறைபாடுகளை அறிவியல் அடிப்படையில் கண்டறிந்து, சரியான மதிப்பீடு மற்றும் சிகிச்சை வழங்குவதற்காகவே "மேதா" திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அணியை குழந்தைகள் மனநல நிபுணர் பேபி லல்லி வழி நடத்துகிறார். கிளினிக்கல் உளவியல் நிபுணர்கள் அகல்யா, வைஷாலி, தெரபிஸ்ட்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் இணைந்து செயல்படுகின்றனர். நியூரோ பவுண்டேஷன் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் நடராஜன் மற்றும் மூத்த மனநல நிபுணர் ஸ்ரீதர் ஆகியோரும் நிகழ்ச்சியில் உரையாற்றி, குழந்தைகளின் மன மற்றும் மூளை வளர்ச்சியை ஆரம்பத்திலேயே கவனிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர்.



சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 49வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி நடைபெறவுள்ளதையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அ.அருண் தம்புராஜ் நேற்று (08.05.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) வாணி ஈஸ்வரி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் க.மஞ்சுளா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




தருமபுரி மாவட்ட இடதுசாரி கட்சிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத்திய அரசயை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தருமபுரி பி எஸ் என் எல் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வணிக சிலிண்டர் விலை உயர்வை திரும்ப பெறவலியுறுத்தியும், ரயில்வேதுறையில்ஆட்குறைப்புசெய்வதைகைவிடகோரியும்கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் விடுதலை சிறுத்தை கட்சியின் தருமபுரி மைய மாவட்ட செயலாளர் த.கு.பாண்டியன், கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன், சிசுபாலன் மற்றும் இடதுசாரி, விடுதலை சிறுத்தை கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066